# செம்மண்

நிலம் 3 துகள் 159 வள்ளுவர் ஆண்டு 2052, 05 - 11 ஆவணி 2023 வாரமலர் பக்கங்கள் 18



# உயிர் தப்பிய சரத் பொன்சேகா...!

மொழியாக்கம்
கமலநாதன்

சுகா கிரியேசன் என்கிற இணையத்தளத்தின் "ரோக் வித் சுகத்" என்கிற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு செவ்வியளித்திருந்தார் முன்னாள் படைத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா. இந்தச் செவ்வியில் தன் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதல் பற்றியும் அதுசார்ந்த பல வியடங்களையும் கூறினார். அதில் அவர் குறிப்பிட்ட விடயங்களைச் செம்மண் வாசகர்களுக்காக இங்கு தருகிறோம்.

"2006ஆம் ஆணடு ஏப்ரல் மாதம் 25ஆம் திகதியன்று கொழும்பு படைத் தலைமையகத்தில் வைத்து என் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தக் குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகிய நான் பயணித்த காரில் ஆயிரத்து 700க்கு மேற்பட்ட குண்டு துளைத்த காயங்கள் உண்டாகியிருந்தன. அந்த இடத்தில் ஆயுதம் தாங்கிய சிப்பாய்கள் இருவர் எனக்குச் சலூட் அடித்தார்கள். அவர்களுக்கிடையில் மஞ்சள் நிற மேலாடையும் நீல நிறக் காற்சட்டையும் அணிந்து நின்ற பெண் ஒருத்தியே இந்தத் தாக்குதலை மேற்கொண்டார். அந்தக் காரின் முன் இருக்கையில் இருந்த எனது மெய்ப்பாதுகாவலர் கொல்லப்பட்டார். அதைச் செலுத்தி வந்த சாரதி படுகாயமடைந்த நிலையில் இடது கை செயலிழந்தவராகத் தற்போதும் வாழ்ந்துகொண்டிருக்கிறார். நான் அமர்ந்திருந்த ஆசனத்திலிருந்து 2 மீற்றர் தூரத்திலேயே அந்தக் குண்டு வெடித்தது. இதனால் நான் படுகாயம் அடைந்தேன். எனது காருக்கு முன்னால் 15 மீற்றர் தூரத்தில் மோட்டார் சைக்கிளில் துப்பாக்கிளுடன் பயணித்த இரண்டு சிப்பாய்களும் இதில் கொல்லப்பட்டனர். அவர்கள் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிள்களுடன் அவர்கள் கீழே விழுவதைக் கண்டேன். அந்த மோட்டார் சைக்கிள்களின் எரிபொருள்

**"எனது தலையிலும் வயிற்றிலும் தோளிலும் காயங்கள் ஏற்பட்டுக்குடல் வெளித்தள்ளியிருந்தது. இதனால் வயிற்றைப் பொத்திப் பிடித்தபடி நான் கீழே இறங்கினேன். அதுவரை யாரும் அந்த இடத்துக்கு வரவில்லை. காரில் பயணித்த அனைவரும் இறந்துவிட்டனர் என்றே எல்லோரும் நினைத்து அதிர்ச்சியில் நின்றார்கள்"**



வருடமாவது எடுக்கும். எனவே அது சாத்தியமானதாக இருக்கவில்லை.

**தாக்குதலை ஏற்பாடு செய்தது மொறிஸ்...!**

என் மீதான இந்தத் தாக்குதலுக்கான ஒழுங்குகளை இறுதி வரை வழிநடத்தியவர் புலிகளின் உறுப்பினரான மொறிஸ் என்பவர். பின்னர் அவர் கைது செய்யப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தார். பின்னர் நானும் கைதியாக அவருடன் வெலிக்கடைச் சிறையில் இருந்தேன். சில சந்தர்ப்பங்களில் நான் எனது வழக்குக்காக நீதிமன்றத்துக்குச் செல்லும்போது என் மீதான தாக்குதல் வழக்குக்காகச் சிறைச்சாலை பஸ்ஸில் மொறிஸூம் என்னுடன் வருவார். இருவரும் அருகருகில் இருந்து கதைப்பதுண்டு. அவ்வாறான சந்தர்ப்பம் ஒன்றில், படைப் புலனாய்வுத் துறையினரின் விசாரணையின்போது குண்டு வெடித்தபோது தான் காலிமுகத்திடலில் நின்றேன் என்று பொய் கூறினேன் என்றும் குண்டு வெடித்தபோது தான் படைத் தலைமையகத்தில் மேல்மாடி ஒன்றுக்கு ஏறும் படியில் நின்று தாக்குதலை அவதானித்துக்கொண்டிருந்தேன் என்றும் சொன்னார்.

நான் சிலவேளை அந்தத் தாக்குதலில் தப்பினால் என்னைக் கொண்டு செல்லும் அம்புலன்ஸ் வாகனம் மீது கிளைமோர்த் தாக்குதலை மேற்கொள்ளத் திட்ட மிட்டிருந்தனர். கொழும்பு - சிலேவ் ஐலண்டில் நின்றுகொண்டு, வேலை முடிந்துவிட்டது என மொறிஸ் புலிகளுக்குப் பின்னர் அறிவித்தார். இதனால் தான் அந்தத் தாக்குதலை நடத்தக் காத்திருந்த இரண்டாவது குண்டுதாரியை அங்கிருந்து செல்லுமாறு பொட்டு அறிவித்திருக்கிறார். அதை ஏற்று அவரும் அந்த இடத்திலிருந்து சென்றதால்தான் என்னால் உயிர்தப்ப முடிந்தது.

எனக்கு ஒரு வாரத்தின் பின்னர்தான் சுயநினைவு வந்தது. அப்போது தாக்குதல் நடந்த சந்தர்ப்பம் எல்லாம் நினைவுக்கு வந்தன. குண்டு வெடித்ததை அங்கு எழுந்த தீச்சுவாலை மூலம் அறிய முடிந்தது. குண்டு வெடித்த சத்தம் மிக அருகில் என்பதால் எனக்குக் கேட்கவில்லை.

கலனின் மூடி கழன்றோ, கலன் வெடித்தோ பெற்றோல் தரையில் ஊற்றிக்கொண்டிருப்பதையும் கண்டேன்.

எனக்கு அருகிலிருந்த சிப்பாய்க்கு வயிற்றில் காயம் பட்டிருந்தது. அவர் தற்போது செயற்கை வயிற்றுடன் உயிர்வாழ்ந்துகொண்டிருக்கிறார். எனது தலையிலும் வயிற்றிலும் தோளிலும் காயங்கள் ஏற்பட்டுக்குடல் வெளித்தள்ளியிருந்தது. இதனால் வயிற்றைப் பொத்திப் பிடித்தபடி நான் கீழே இறங்கினேன். அதுவரை யாரும் அந்த இடத்துக்கு வரவில்லை. காரில் பயணித்த அனைவரும் இறந்துவிட்டனர் என்றே எல்லோரும் நினைத்து அதிர்ச்சியில் நின்றார்கள்.

நான் கீழே இறங்கியதைக் கண்டு தூரத்தே நின்ற சிப்பாய் ஒருவர் ஓடி வந்து என்னை மருத்துவமனைக்குக் கொண்டு செல்வதற்காக அம்புலன்ஸை அழைத்தார். நான் சுய நினைவுடன் அம்புலன்சில் ஏறினேன். கொழும்பு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டேன். அங்கு என்னை எதிர்பார்த்து நின்ற மருத்துவரிடம், எனக்கு உள் காயம் ஏற்பட்டிருக்கிறது, அதனால் குருதி உள்ளே நிறைந்துகொண்டிருக்கிறது. முதலில் குருதியைக் குத்தி வெளியே எடுக்கும்படி கூறினேன். அவரும் அதையே முதலில் செய்யவிருக்கிறேன் என்று என்னிடம் கூறினார். உள்ளே கொண்டு சென்றதும் எனது ஆடைகள் கழற்றப்பட்டன. எனது காற்சட்டையைக் கழற்றியபோது நான் கழற்றுவதற்கு உதவியது வரை நினைவிருக்கிறது. அதன் பின் மயக்கமடைந்துவிட்டேன்.




**தாக்குதலுக்கு நேரம் குறித்த முஸ்லிம் நபர்**

எனது அலுவலகத்திலிருந்து எனது பவீடு 100 மீற்றர் தூரத்தில் இருந்தது. அநேகமாகப் பகல் 1.30மணியளவில் மதிய உணவுக்காகச் செல்வது வழக்கம். எனது வீட்டில் கோக்கியாக (சமையல்காரன்) பணிபுரிந்தவர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட முஸ்லிம் ஒருவர். 2002இல் நான் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றியபோது அவரே எனது சமையலாளியாக இருந்தார். அவர் அப்போதே புலிகளின் உறுப்பினராகவிருந்து பின்னர் படையில் சேர்ந்திருக்கிறார். இவ்வாறான நபர்கள் யார் எவர் என்று விசாரித்துப் பணிக்கு அமர்த்தும் சூழல் போர்க்காலத்தில் இருக்கவில்லை. அவ்வாறு ஒரு தனி நபரைப் பற்றி விசாரித்துச் சேவையில் அமர்த்துவதற்குக் குறைந்த பட்சம் ஒரு

(மிகுதி அடுத்த வாரம்)

# இனியொரு இனக்கலவரம் சாத்தியமா ?

நியூட்டன்

1958,1977,1983 ஆகிய ஆண்டுகளில் இலங்கையில் இனக் கலவரங்கள் நடந்தன. இவற்றில் 1958, 1977 ஆகிய காலப் பகுதிகளில் நடந்த இனக்கலவரங்கள் சிங்கள இனவாதிகளால் முன்னெடுக்கப்பட்டன. 1983 இனக்கலவரத்தையும் அவர்களே முன்னின்று நடத்தினாலும் அது தோற்றுவிக்கப்பட்டதற்குத் தமிழர் தரப்புக் காரணமாக இருந்தது. அந்த ஆண்டு ஜூலை 23ஆம் திகதியன்று தின்னவேலியில் புலிகளின் தாக்கதலில் 13 படையினர் கொல்லப்பட்ட பின்னணியே இந்தக் கலவரத்துக்குக் காரணம். சிங்களச் சிப்பாய்களில் 13பேரை ஆயுததாரிகளான தமிழர் கொன்றனர் என்கிற செய்தியாகவே அன்று அது கணிக்கப் பட்டது. இந்த விடயம், கி.பி 10ஆம் நூற்றாண்டில் சோழர் படையெடுப்பின் மூலம் அனுராதபுரத் தலைநகரம் கைப்பற் றப்பட்டது போன்ற ஓர் உணர்வைச் சிங்களவர்களுக்கு ஏற்படுத் தியது. பெரும்பான்மை இனமான சிங்களவருக்கு அதுவும் ஆயு தம் தாங்கிய படையினருக்குத் தமிழர் அடித்துவிட்டனர் என்கிற செய்தியாகவே அது இருந்தது.

### சிப்பாய்களின் சடலங்களைக் காட்டி உசுப்பேற்றல்

தின்னவேலியில் படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்ட சம்ப வத்தை அப்போதைய அரசதலைவர் ஜெ.ஆர்.ஜெயவர்த்தன மிகவும் நுட்பமான முறையில் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டார். இறந்த படையினரின் உறவுகள் பொரளை கனத்தை மயானத்தில் காத்திருந்தார்கள். அவர்களின் கொந்தளிப்பை மேலும் அதிகரிக் கும் விதமாக படையினரின் சடலங்களை மேலும் ஒரு நாள் தாம தித்து அங்கு எடுத்துச் செல்லச் செய்தார். இதன் மூலம் சிங்கள மக்களைக் குமுறும் நிலைக்கு - கொதிநிலைக்குக் கொண்டுவந்தார். படையினரின் சடலங்கள் தீயூட்டப்பட்டதும் கலவரம் தொடங் கியது. சிறை வைக்கப்பட்டிருந்த குட்டிமணி, தாங்கத்துரை உட் பட 53 கைதிகள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்த சிங் களக் கைதிகளால் கொல்லப்பட்டனர். கொழும்பு முழுதும் வன் முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. அதற்குக் காவல்துறை, படைத்தரப்பு ஆகியவற்றின் அனுசரனை இருந்தது. இந்தக் கல வரத்தில் 3ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

### இலங்கைக்கு அபகீர்த்தி

1983இல் நிகழ்த்தப்பட்ட இனக்கலவரம் இலங் கைக்கு உலக அளவில் அபகீர்த்தியை ஏற்படுத்தியது. அதன் பின் னர் தமிழர் மத்தியில் பல இயக்கங்கள் உருவாக்கப்பட்டு ஆயுதப் போராட்டத்தில்



செம்மணி

ஈடுபட்டன. இனக்கலவரம் குறித்துக் கேள்விப்பட்டு இனக் கலவரத்தால் பெருமளவு பாதிப்புகளுக்கு உள்ளாகாத வடக்குக் கிழக்கு இளைஞர்களே ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். கொழும்பில் இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்கள் ஒரு சில மாதங்கள் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வந்து பாதுகாப்புக்காகத் தங்கியிருந்துவிட்டுப் பின்னர் கொழும்புக்கும் வெளிநாடுகளுக்குமாகச் சென்றனர். போராட்டத்தில் முக்கிய பங்கு வகித்திருக்க வேண்டிய பாதிக்கப்பட்டவர்கள் இவர்களே. ஆனால் அவர்கள் வடக்குக் கிழக்கில் வாழ விரும்பாதவர்களாக இருந்தனர்.

**தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடந்தால் மிகவும் பலம் பெற்றிருக்கின்ற புலிகள் தம் மீது உக்கிரமாகத் தாக்குவார்கள் என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. அதைவிட முன்பு தாம் முன்னெடுத்த இனக்கலவரத்தால் புலிகள் பெருமெடுப்பில் வளர்ந்தனர் என்பதையும் அறிந்திருந்த அவர்கள் புலிகளை மேலும் பலப்படுத்திவிடுவதைத் தவிர்ப்பதற்காக மிகவும் சிரமப்பட்டுச் சிங்கள மக்களைத் தமது கட்டுக்குள் வைத்திருந்தனர்.**



**பின்னர் தவிர்க்கப்பட்ட கலவரங்கள்**

**13** சிப்பாய்கள் இறந்தபோது கொதித்தெழுந்த சிங்கள மக்கள் பின்னர் புலிகளால் ஆயிரக்கணக்கில் படைச் சிப்பாய்கள் கொல்லப்பட்டபோதெல்லாம் எந்தக்கலவரத்தையும் செய்யத்துணியவில்லை. **1985**இல் அனுராதபுரம் போதிமரம் எனப்படும் வெள்ளரசுமரத்தை அண்மித்த பகுதியில் தாக்குதலை மேற்கொண்ட போது அனுராதபுரம் ரயில் நிலையப் பகுதியில் வைத்துச் சிங்களவரால் **50**வரையான தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஆனால், அதற்கு முன்னர் இனக்கலவரம் ஒன்றுக்குத் தூண்டிய அப்போதைய அரசதலைவர் ஜெ.ஆர்.ஜெயவர்த்தனவும், அப்போதைய தலைமை அமைச்சர் பிரேமதாசவும் அதை இனக்கலவரமாக்குவதற்குத் தயாராக இருக்கவில்லை அது தமது அரசுக்குப் பன்னாட்டு அளவில் பெரியதொரு நெருக்கடியை ஏற்படுத்தும் என்று கதை விடப்பட்டாலும் அதற்கு வேறு காரணங்களே இருந்தன. தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடந்தால் மிகவும் பலம் பெற்றிருக்கின்ற புலிகள் தம் மீது உக்கிரமாகத் தாக்குவார்கள் என்ற பயம் அவர்களுக்கு இருந்தது. அதைவிட முன்பு தாம் முன்னெடுத்த இனக்கலவரத்தால் புலிகள் பெருமெடுப்பில் வளர்ந்தனர் என்பதையும் அறிந்திருந்த அவர்கள் புலிகளை மேலும்

பலப்படுத்திவிடுவதைத் தவிர்ப்பதற்காக மிகவும் சிரமப்பட்டுச் சிங்கள மக்களைத் தமது கட்டுக்குள் வைத்திருந்தனர்.

**சந்திரிகாவின் ஆட்சிக்காலம்**

சந்திரிகா இரண்டு தடவைகள் அரசதலைவராக இருந்த காலத்தில் படையினர் தொடர்பில் இரு விடயங்களில் கவனம் செலுத்தினார். படையினருக்குத் தேவையான ஆயுதங்களையும் ராடர் போன்ற போர் உபகரணங்களையும் போர் வானூர்திகள் போன்றவற்றையும் கொள்வனவு செய்து பலப்படுத்தினார். அத்தோடு படை உயர் அதிகாரிகளை வெளிநாடுகளுக்கு அனுப்பிப் பயிற்சிகள் பெறச் செய்தார். புலிகள் தலதாமாளிகை மீது குண்டுத்தாக்குதல் நடத்திய பின்னர் சிங்கள மக்கள் தமிழருக்கு எதிராகக் குறைந்த பட்சம் தலதாமாளிகை அமைந்துள்ள கண்டி நகரில்கூட ஒரு தமிழரின் வீட்டு யன்னல் கண்ணாடி கூட உடைக்கப்படவில்லை. இந்தச் சம்ப வம் அப்போது படைத்துறை அமைச்சராகவிருந்த கண்டியைச் சேர்ந்த ஜெனரல் ரத்வத்தையால் மிகவும் கவனமாகக் கையாளப்பட்டது.

**சிங்களவரின் படிப்பினை**




1983 கலவரம் ஏற்பட்டு 40 ஆண்டுகள் கழிந்துள்ளன. அந்தக் கலவரம் சிங் கள ஆட்சியாளர்களையும் சிங்கள மக்களையும் பௌத்த மதத்தையும் எவ் வாறெல்லாம் பாதித்தது என்பது சிங்களவருக்கு நன்கு தெரியும். சிங்களப் புத்தி ஜீவிகள் இதுதொடர்பாகப் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டிருந்தனர். அந்த அடிப்படையிலேயே வடக்குக் கிழக்கில் தேசிய வேலைத்திட்டங்கள் பல போர் முடிந்த பின்னர் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இது விடயத்தில் சிங்களவரிடம் ஒரு நிழக்சி நிரல் இருப்பதால் கலவ ரங்களை ஏற்படுத்தி மேலும் 25 ஆண்டுகள் பின்நோக்கிச் செல்வதற்கான வேலைத்திட்டங்களில் அவர்கள் ஈடுபடப்போவதில்லை. போரின் பின்னர் ஒரு கைக்குண்டைக் கூட வீசும் அளவுக்கு புலிகளின் செயற் பாடு இருக்கவில்லை. ஆயுதப் பயிற்சி பெற்ற 13ஆயிரத்துக்கு மேற் பட்ட போராளிகளை மறுவாழ்வளித்து விடுதலை செய்தனர் மகிந்த தரப்பினர். 1983 காலப்பகுதி மனறநிலையில் சிங்கள ஆட்சியாளரும் படையினரும் இருந்திருந்தால் அந்தப் போராளிகளை கொன்றிருப் பார்கள். இனக்கலவரம் ஒன்றை நடத்தவேண்டிய தேவை சிங்களவர் களுக்கு இனியும் இல்லை என்பதையே இது காட்டுகிறது. சிங்களவ ருக்கு எதிரான மனநிலையைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்துவதே தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளின் வேலையாக இருக்கிறது. அந்த வகையி லேயே தமிழ் அரசுக் கட்சியின் நகர்வுகளும் இருக்கின்றன. சிங்களவர் மிக நீண்ட போரால் பல்வேறுபட்ட அனுபவங்களைப் பெற்ற அளவுக்குத் தமிழ்த் தலைவர்கள் பெறவில்லை.

**தமிழ் முஸ்லிம் முரண்பாடு**

இனிவரும் காலங்களில் இனக்கலவரம் என்ற அளவுக்கு நிலமை செல்லா விட்டாலும் வடக்க்குக் கிழக்கில் தமிழரும் முஸ்லிம்களும் முரண்படும் சூழல் அதிகமுண்டு. புலிகள் அழிக்கப் பட்ட பின்னர் முஸ்லிம்கள் பொருளாதாரத்திலும் கல்வியிலும் பலம் பெற்றுள்ளதுடன் அவர்க ளின் இனப்பரம்பலும் மிக வேகமாக அதி கரித்து வருகிறது. முஸ் லிம்களின் இனப் பெருக்கத்துக்கு ஈடுகொடுக்கும் அள வில் தமிழர்களும் இல்லை சிங்களவர் களும் இல்லை என்பதுடன் வடக்குக் கிழக் குத் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலையிலேயே முனைப்பாக உள்ளனர். இதனால் இலங்கை ஆட்சியாளர்கள் இனி வரும் காலங்களில் முஸ்லிம்களுக் குச் சார்பான முடிவுகளை எடுப்ப தன் மூலம் இவ்விரண்டு சிறு பான்மை இனங்களும் தமக்குள் மோதிக்கொள்வதற்கு இனி வாய்ப் புகள் அதிகம் காணப்படும்.

புதுல் அத்தியாயம்




03

# மகாவம்சம் கூறுவது என்ன...?

மகாவம்சம் இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு வரலாற்று நூலாகக் கொள்ளப்படுகிறது. கி.பி 6ஆம் நூற்றாண்டில் மகாநாமர் என்கிற பிக்குவால் பாளிமொழியில் எழுதப்பட்டது. இது கி.மு 5ஆம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 5ஆம் நூற்றாண்டு வரையான பத்து நூற்றாண்டுகால வரலாறு பற்றிக் குறிப்பிடுகிறது. ஐ.நாவின் யுனெஸ்கோ இவ்வாண்டு வெளியிட்ட அறிக்கையில் பழமையான ஆவணமாக இந்த நூலை ஏற்றிருக்கிறது. அந்த மகாவம்சம் என்ற நூலில் என்னவெல்லாம் கூறப்பட்டிருக்கிறது என்பதைச் செம்மண் வாசகர்களுக்கு இந்தப் பகுதியில் வாசிக்கத் தருகிறோம்.

சமுத்திரத்திலும் நிலத்திலும் வசித்த எண்பது கோடி நாகர்களுக்கு உபதேசம் செய்து திரிசரணமளித்துத் தமது பஞ்சசீலத்தில் ஈடுபடுத்தினார்.

மகோதரனுடைய தாய் மாமானும் கல்யாணி மன்னனுமாகிய மணியக்கிகன் அந்தப் போரில் கலந்துகொள்ள அங்கு வந்திருந்தான்.

முன்பு புத்தர் முதல் முறை வந்திருந்தபோதே அவரது உபதேசத்தைக் கேட்டு திரிசரணத்தைத் தழுவி பஞ்சசீலத்தை ஏற்றுக்கொண்டிருந்த அவன் இப்போது ததாகதரிடம் இவ்வாறு வேண்டினான்-

''இறையே! எங்களிடம் தாங்கள் காட்டிய கருணை மகத்தானது. இங்கு தோன்றாமல் இருந்திருந்தால் நாங்கள் எல்லோரும் சாம்பலாகி மறைந்திருப்போம். தங்களுடைய கருணை மேலும் அதிகமாக எனக்குக் கிட்டட்டும். அன்புருவானவரே! ஒப்பற்றவரே! மீண்டும் ஒருமுறை எமது நாட்டுக்கு விஜயம் செய்யக் கருணை கூர்ந்து அருள்புரிய வேண்டும்''

அவனுடைய நாட்டுக்கு விஜயம் செய்யத் தம்முடைய சம்மதத்தைப் புத்தர் மௌனத்தின் மூலம் தெரிவித்த பின்னர் அவன் அதே இடத்தில் புனித நினைவுச் சின்னமாக ராஜாயதன விருட்சத்தை நட்டான்.

பின்பு உலக நாயகர் அந்த விருட்சத்தையும், ரத்தின சிம்மாசனத்தையும் நாக மன்னர்களிடம் கொடுத்து அதே இடத்தில் வைத்து அதைப் பூசித்து வருமாறு சொன்னார்.

இவை என்னால் உபயோகிக்கப்பட்டவை. அந்த ஞாபகார்த்தமாக இவற்றைப் பூசித்து வருவீர்களாக. என்னால் நேசிக்கப்பட்ட இவை உங்களுக்கு மகிழ்வையும் ஆசியையும் அளிக்கும்.

அருளானர் இவ்வாறு சொன்னதுடன் மேலும் பல உபதேசங்களை



நாகர்களுக்கு அருளிவிட்டு அகில உலகங்களுக்கும் ரட்சகரான பகவான் ஜேதவனத்துக்குத் திரும்பினார்.

**நாகத்வீப விஜயம் இங்கே முடிகிறது**

இதற்குப் பிறகு மூன்றாவது ஆண்டில் நாக மன்னன் மணியக்கிகன் சம்புத்தரிடம் வந்து அவரைச் சங்கத்தாருடன் தனது நாட்டுக்கு வருரமாறு அழைத்தான்.

அவர் ஞானமடைந்த எட்டாவது ஆண்டில் ஜேதவனத்தில் தங்கி இருந்த போது, ஐநூறு பிக்குகள் சூழ வைசாக மாதம் இரண்டாம் நாள், பௌர்ணமியன்று உணவு உட்கொள்ள வேண்டிய நேரம் அறிவிக்கப்பட்டதும், பயத்தை வென்றவர் - அறிஞர்க்கறிஞர் உத்தரீயத்தைப் போர்த்துக்கொண்டு, பிட்சா பாத்திரத்தைக் கையிலேந்தி மணியக்கிகனுடைய கல்யாணி நாட்டுக்குச் சென்றார்.

அங்கே ரத்தினங்கள் பதித்த மண்டபத்தின் கீழே பிக்குகளுடன் அமர்ந்தார். அங்கு அவருக்கு விலைமதிப்பற்ற சிம்மாதனம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த இடத்தில்தான் பின்னால் கல்யாணி சேதியம் கட்டப்பட்டது.

மிகவும் மகிழ்ச்சியடைந்த நாக மன்னனும் அவனுடைய பரிவாரங்களும் சத்திய தேவருக்கும் அவருடைய சீடர்களுக்கும் அமுதன்ன உணவும் பானமும் படைத்து உபசரித்தனர்.

**ரத்தினங்கள் பதித்த மண்டபத்தின் கீழே பிக்குகளுடன் அமர்ந்தார். அங்கு அவருக்கு விலைமதிப்பற்ற சிம்மாதனம் அமைக்கப்பட்டிருந்தது. இந்த இடத்தில்தான் பின்னால் கல்யாணி சேதியம் கட்டப்பட்டது**

இரக்கமே உருவான பகவான் அங்கு உபதேசம் செய்த பின்பு எழுந்து அங்கிருந்து புறப்பட்டார். சுமணகூட பர்வதத்தில் கண்ணுக்குப் புலனாகுமாறு தமது பாதச் சுவடுகளைப் பதித்துச் சென்றார்.

மலையடிவாரம் அவருக்கு விருப்பமளிப்பதாக இருந்ததால் அங்கு பிக்குகளுடன் அன்றைய பொழுதைக் கழித்த பின்பு அவர் தீகவாபிக்குப் (இலங்கையின் கிழக்கு மாகாணத்திலுள்ள கண்டியக் காட்டு ஏரியாக இருக்கலாம்) புறப்பட்டார்.

பின்னர் சேதியம் எழுந்த அந்த இடத்தைப் புனிதப்படுத்த அங்கு பகவான் தமது சீடர்களுடன் அமர்ந்து தியானம் செய்தார்.

பின்னர் மகாமுனிவர் அந்த இடத்திலிருந்து எழுந்தார். தாம் போவதற்குத் தகுதியான இடம் எது? தகுதியற்ற இடம் எது என்பதை அறிந்திருந்த அவர் பின்னால் மகாமேகவன ஆராமா (அனுராதபுரத்துக்குத் தெற்கே இருந்த ஒரு வனம்) எழுந்த இடத்துக்குச் சென்றார். பின்னர் புனித போதி விருட்சம் நடப்பட்ட அந்த இடத்தில் அவர் தமது சீடர்களுடன் அமர்ந்து தியானத்தில் ஈடுபட்டார்.

தியானத்தில் அமர்ந்த இடத்தில்தான் பின்னால் பெரிய தூபம் எழுந்தது. அதன் பின் முன்போலவே தூபராம அமைந்தது. தியானத்திலிருந்து எழுந்ததும் பின்னர் சிலசோதியம் அமைந்த இடத்துக்குச் சென்றார்.

பிக்குகளின் தலைவர் அங்கு கூடியிருந்த தேவர்களுக்கு உபதேசம் செய்ததும் அறிவொளியின் எல்லாப் பாதைகளையும் கடந்து பேரொளி பெற்ற பெருமான் ஜேதவனத்துக்குத் திரும்பினார்.

எதிர்காலத்தில் இலங்கையின் உய்வையெண்ணி அப்போது இலங்கையில் இருந்த நாகர்களுக்கும் அசுரர்களுக்கும் அதிகமான அளவு நன்மைகளைச் செய்வதற்காகப் பேரருள் பெருந்தகை இவ்வாறாக இந்த அழகிய தீவுக்கு மூன்று முறை விஜயம் செய்தார். உண்மையின் ஒளி வீசி ஜொலிக்கும் இத்தீவு அதனால்தான் பௌத்தர்களுடைய பெரு மதிப்புக்கு உள்ளதாயிற்று.

(தொடரும்)

# ஏன்...?

நட்சத்திரா

# அப்படி...?



57

## சிறுவயதில் பெரிதாகத் தெரிந்த விடயங்கள் பெரியவர்கள் ஆனதும் சிறுத்து விடுவது ஏன்...?

சிறுவயதில் நீங்கள் ஓடி ஆடிய இடம், விளையாடிய திடல், குளித்த தொட்டி அல்லது நீரோடை, குளம், குட்டை, நடந்து திரிந்த நடைபாதைகள், படித்த பாட சாலைகள், பாதைகள், பாலங்கள், மரங்கள், சூழல் கள் என எல்லாமே பெரிதாகவும் பிரமாண்டமாகவும் உங் கள் மனதில் பதிந்திருக்கும். நீங்கள் பெரியவர்கள் ஆன தும் நீங்கள் சிறு வயதில் பார்த்த மேற்குறித்த அனைத்து விடயங்களும் சிறியவையாகிச் சிறுத்துத் தெரியக் கண்ட அனுபவம் உங்களுக்கு உள்ளதா....?

சிறுவயதில் வீட்டிலிருந்து புறப்பட்டு கோவிலுக்கோ பாடசாலைக்கோ வேறு இடங்களுக்கோ செல்லும்போது நீண்ட தூரம் பயணிப்பதாகத் தெரிந்த அதே இடம் அதே நபர்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் மிக அருகிலிருப்பதாகத் தெரிகிறது....! இதற்குக் காரணம் என்ன....?

ஆம் இந்த அனுபவம் உங்களில் பலருக்கு இருக் கும்...! இதற்குக் காரணம் என்ன தெரியுமா...?

சிறுவயதில் 3அடிக்குக் குறைவான உயரத்தில் நீங் கள் இருந்திருப்பீர்கள். அப்போது நீங்கள் பார்க்கும் பார் வையின் உயரம் அதாவது கண் மட்டம் உயரம் குறை வாக இருந்தது. இதனால் உங்களைச் சுற்றியிருக்கும் அனைத்தும் பெரிதாகவும் பிரமாண்டமாகவும் தெரிந்

தன. எறும்பு போன்ற சிறிய உயிரினங்களுக்கு இவ்வாறு தான் சுற்றியுள்ளவை பிரமாண்டமாகத் தெரியும். உயரம் குறைவான கண் மட்டத்தில் பார்த்தபோது பெரிதா கத் தெரிந்த விடயங்கள் நீங்கள் வளர்ந்து உயரமானதும் ஒப்பீட்டளவில் சிறிதாகத் தெரிகின்றன. இதற்கு உங்கள் வளர்ச்சியும் உயரமுமே காரணம்.

இதைவிடக் குறிப்பிட்ட பழகிய, நடந்து திரிந்த இடங்கள் அதிக தூரமாக இருந்தன என்ற உணர்வு ஏற்படக் காரணம் சிறுவயதில் குறுகிய இடைவெளிகளில் கால்களை வைத்து நடப்பதாலே ஆகும். வளர்ந்த பின்னர் கால் வைக்கும் இடைவெளி பெரிதாக இருப்பதால் அந்தத் தூரம் குறுகியதாகத் தெரிகிறது. எனவே சிறு வயதில் பார்த்த - அனுபவித்த விடயங்கள் இப்போது சிறுத்திருப்பதான வேறுபாட்டை நீங்கள் உணரக் காரணம் அப்போது குறைந்த உயரத்தில் இருந்து கண் பார்த்ததும் சிறிய கால்களால் நடந்து சென்றதுமே ஆகும்.

# கடவுளின் பெயரால் களவு...!



நித்தியா

நம்மவர்கள் வைத்திருக்கின்ற முச்சக்கர வண்டிகள், டிப்பர்கள், ஆழ்துளைக் கிணறு துளையிடும் இயந்திரங்கள் எனப் பலதிலும் ஏதோ ஒரு கடவுளின் பெயரைப் பொறித்து அவரே தமக்குத் துணை, பலம், ஆதரவு, நம்பிக்கை, சக்தி என்றெல்லாம் பல வாக்கியங்களை எழுதியிருப்பார்கள். இத்தகு வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி அளவுக்கு அதிகமமாகப் பணம் அறவிட்ட, மணல், மரம், போதைப் பொருள்களைக் கடத்திச் சென்ற, சட்டவிரோதமாகச் செயற்பட்ட, விபத்தை ஏற்படுத்திவிட்டுத் தப்பிச் சென்ற அனுபவங்களைப் பல பொதுமக்கள் அனுபவித்திருக்கிறார்கள். இத்தகு கயவர்களுக்குக் கடவுள் துணை போகிறார் என்பதையே அவர்கள் பொறித்திருக்கும் வாக்கியங்கள் காட்டி நிற்கின்றன. தாம் செய்யும் களவுகள், சட்டவிரோதச் செயல்களுக்குக் குறிப்பிட்ட கடவுளின் துணை தமக்கு உண்டு என்பதையே அந்த வாகனச் சாரதிகளின் செயல்கள் எடுத்தியம்புகின்றன.

**அலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கும் இந்த வாகனங்களில் பல மாதக்கணக்கில் கழுவிச் சுத்தம் செய்யப்படாமல், உரியவாறு கவனிக்கப்படாமல் தூசு படிந்து, அழுக்கு மூட்டையாகவேறு உலாவித்திரிகின்றன**

**முச்சக்கர வண்டிகள்**

நாமிருக்கப் பயமேன், நயினை நாகம்மாள் துணை, சந்நிதியான் அருள், நல்லூரான் துணை, பைபிள் வாக்கியங்கள், கீதை வரிகள், குர் ஆன் வசனங்கள், பௌத்த தர்மத்தைப் போதிக்கும் வாக்கியங்கள் (சிங்களச் சாரதிகள்) என்றெல்லாம் தமது முச்சக்கர வண்டிகளில் பலவாறான வாக்கியங்களை எழுதுகின்றனர். வெள்ளி, ஸ்ரிக்கர் வேலைப்பாடுகளால் மேலதிக அலங்காரங்கள் செய்யப்பட்டிருக்கும் இந்த வாகனங்களில் பல மாதக்கணக்கில் கழுவிச் சுத்தம் செய்யப்படாமல், உரியவாறு கவனிக்கப்படாமல் தூசு படிந்து, அழுக்கு மூட்டையாகவேறு உலாவித்திரிகின்றன. இவ்வாறு கடவுள் வாக்கியங்கள் எழுதப்பட்டிருக்கின்ற முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்துவோர் தம்மையும் அந்தக் கடவுள் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையில் ஏறி அமர்ந்து விடுகின்றனர். வெளியில் எழுதியிருக்கும் கடவுளின் படங்கள் முச்சக்கரவண்டிக்குள் தொங்கவிடப்பட்டுள்ள படங்கள், சாம்பிராணி மற்றும் வாசனைகள், ஒட்டுநரின் திருநீறு, சந்தனம், குங்குமம், காதில் பூ, உருத்திராட்ச மாலை, கையில் பல வர்ண நூல்கள்,



பட்டுத்துணிகள் எனப் பல்வேறு வகையில் தம்மையும் வாகனத்தையும் சோடித்திருப்பார்கள். இவ்வாறான முச்சக்கர வண்டிகளை வாடகைக்கு அமர்த்தி ஏமாந்த, ஏமாற்றப்பட்ட, சுத்துமாத்துகளுக்கு முகம்கொடுத்த சம்பவங்களே பலரின் அனுபவங்களாக உள்ளன. வழமையான கட்டணத்தைவிட அதிகளவு பணத்தை அறவீடுவது, நீங்கள் உரிய நேரத்தில் பயணத்தை முடிக்காததால் எனக்கு வரவிருந்த வெளிநாட்டுப் பாட்டி ஒன்றின் ஓட்டம் அடிபட்டுப்போய்விட்டது என்றெல்லாம் பல சுத்துமாத்துக் கதைகளைக் கூறி அன்றைய நாளுக்குரிய உழைப்பை முதலில் சிக்கியவர்களிடம் வாங்கிவிடுகின்றனர். இதனால் முச்சக்கர வண்டிகளில் இடம்பிடித்திருக்கிற கடவுள்கள் பயணிகளைப் பாதிக்கும் கடவுள்களாகவே இருக்கின்றன.

**வியாபார வாகனங்கள்**

பழைய இரும்பு, பாக்கு, மாங்காய், வாழைப்பழம், சிரட்டை, கடதாசிகள், அலுமினியங்கள், மின்கலங்கள், மின் மோட்டர்கள் என எதையாவது கொள்வனவு செய்யவரும் வாகனங்களிலும் இந்தக் கடவுள் துணை விளம்பரங்களைக் காணமுடியும். இவர்களில் பெரும்பாலானவர்கள் பொருள்களை அறாவிலைக்கே வாங்கிச் செல்கின்றனர். பொருள்களை எண்ணி வாங்கி ஏற்றியதும் குடிப்பதற்குத் தண்ணீர் தாருங்கோ எனக் கேட்க வீட்டுக்காரர் தண்ணீர் எடுத்துவருவதற்கிடையில் ஏற்றிய பொருள்களுடன் ஓடி மறைந்த சம்பவங்களும் உண்டு. வீட்டிலிருக்கும் பெறுமதியான பொருள்களைத் தாம் வாங்கிய பொருள்களுடன் மறைத்து எடுத்துக் கொண்டு ஓடுவது, குறிப்பிட்ட வீட்டில் ஆடு, மாடு, கோழி இருக்கும் இடங்களை அவதானித்து வைத்துவிட்டு இரவில் வந்து களவெடுப்பது (மாடுகளை ஏற்றிய சம்பவங்கள் பல நடந்துள்ளன) ஆகியவற்றிலும் இந்தக் கடவுள் துணை வாகனங்கள் ஈடுபடுகின்றன.

**மணல், மரக் கடத்தல் வாகனங்கள்**

டிப்பர் வாகனங்களில் கடவுள் துணை வாக்கியங்களைப் பொறித்துக்கொண்டு அனுமதிப்பத்திரம் இன்றி மண் ஏற்றுவது, அதிகாலையில் மக்கள் எழுவதற்கு முன்னர் பல கிராமங்களில் அவற்றை ஏற்றிச் செல்வது போன்ற விடயங்கள் மிகச் சாதாரணமாக நடக்கின்றன. சங்கனைப் பகுதியில் வயல்களுக்குள் இருந்த மண் மேடு ஒன்றை எவ்வித அனுமதியுமின்றி இவ்வாறானவர்கள் வெட்டி ஏற்றியிருக்கிறார்கள்.

**கடவுளின் பெயரைப் பாவிப்பதற்குக் குறிப்பிட்ட கடவுள்களின் மத நிறுவனங்கள் தடை விதிப்பதுடன் இவற்றைச் சட்ட ரீதியில் முடக்கவும் வேண்டும்.**



**ஆள்துளை இயந்திரங்கள்**

கடவுளர்களின் பெயர்களைப் பொறித்து ஆள்துளை இயந்திரத்தின் ஆங்கிலப் பெயரை எழுதியுள்ள பல இயந்திரக்காரர்கள் இரவு பகலாக எவ்வித அனுமதியும் பெறாமல் ஆள்துளைக் கிணறுகளைத் தோண்டுகின்றனர். அதனால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்புகள் நீர் உவராகும் விடயங்கள் அவர்களுக்குத் தெரிந்திருப்பதில்லை. அதுபற்றிக் கவனத்தில் எடுப்பதுமில்லை. இத்தகைய அடாவடி வேலைகளில் ஈடுபடுவோர் கடவுளின் பெயரைப் பாவிப்பதற்குக் குறிப்பிட்ட கடவுள்களின் மத நிறுவனங்கள் தடை விதிப்பதுடன் இவற்றைச் சட்ட ரீதியில் முடக்கவும் வேண்டும். அவ்வாறு தடை செய்யாவிட்டால் அவர்கள் செய்யும் சகல அடாவடித் தனங்கள், மக்கள் விரோதச் செயல்களுக்கும் குறிப்பிட்ட கடவுளின் துணை இருக்கிறது என்றே அர்த்தம் கொள்ள முடியும். இது விடயத்தில் அரச அதிபர், மத அமைப்புகள் கவனம் செலுத்தித் தடை செய்ய வேண்டும். இல்லாவிடில் குறிப்பிட்ட கடவுளர்களின் கீர்த்திக்கு அபகீர்த்தி ஏற்படுவதை யாரும் தடுக்க முடியாது.



# ஏமாளியள் எண்டிறது இதைத்தானோ?

கதிரேசன் காத்தவராயன்

அண்டைக்கதிலை சுப்பிரமணியம்மாஸ்ரர் வீட்டடிக்குப் போயிருந்தன்.அங்கை பேப்பரோடை இருந்த மாஸ்ரர் என்னைக் கண்டிட்டு உற்சாகமாய் வரவேற்றார். 'என்னவாம் மாஸ்ரர் பேப்பர்க்காறன்?' எண்டு கேட்டுக் கொண்டு இருந்துகொண்டன். 'ம்ம்..உம்ம்...அங்கை சடலம்..இஞ்சை விபத்து எண்டதுகள்தான்... நாட்டிலை எத்தினை நடக்குது? எல்லாம் வலு மோசம்...' எண்டு பெருமூச்சு விட்டார் மாஸ்ரர்.

அந்த நேரமாப் பாத்து கனகர் வந்தார். அவர் இருக்கிறதுக்கிடையிலை சுதன்ரை கூட்டாளியள் ரண்டுபேர் வந்தாங்கள்... சந்தடியைக் கேட்டு சுதனும் வீட்டுக்கையிருந்து வந்து கதிரையளை இழுத்து விட்டான். எல்லாரும் இருந்துகொண்டினம். 'கதிரேசண்ணை என்ன இண்டைக்கு நேரத்தோடை' எண்டார் கனகர். 'ஓஓ.. வீட்டுக்கை இருக்கிறமாதிரியோ கிடக்குது வெக்கை...' எண்டு பதில் சொல்ல எல்லாரும் ஆமோதிச்சினம்.

'காலநிலை வலுவாய் மாறிப்போச்சுது...எல்லாத்துக்கும் நாங்கள்தான் காரணம்' எண்டு சுதன் எல்லாரையும் பாத்தான். 'உண்மைதான்ரா சுதன்' எண்டன் நான். 'மரந்தடியளை கணக்கு வழக்கில்லாதல் தறிச்சதாலை வந்த வினை மாஸ்ரருக்கு இந்த வேம்பும்.. மாவும் காணும்... என்ன?' எண்டார் கனகர். 'உண்மைதான்...இதுகளில்லையெண்டால் என்ரை பாடு?' எண்டு ஆமோதிச்சார் மாஸ்ரர். அப்ப முருகேசரும் வந்து சேந்துகொண்டார்.

'என்னப்பா முருகேசு நாட்டு நடப்புகள் எப்பிடிப் போகுது?' எண்டுமாஸ்ரர் கேட்டதுக்கு முருகேசர் 'நாட்டு நடப்போ...நாடோ?... எங்கையோ போகுது...கடன் குடுத்தவன் வட்டியையும்முதலையும் அறவிடுறதிலை குறியாயிருக்கிறான்.... நூங்கள் வட்டிகட்ட கடன்பட ஆள்தேடுறம்...' எண்டு பெருமூச்சொண்டை விட்டார். 'ஐயா சரியாத்தான் சொன்னீங்கள்...அதுதான் நடக்குது... இப்ப பாக்கேல்லையே தண்ணியிலையும் கை வைச்சாச்சு' எண்டான் ஒரு பெடியன்.

'எங்கடை பக்கங்களிலை...ஆத்துக் கரையளிலை பிரச்சனையில்லை... 'எண்டு கனகர் சொல்லிக் கொண்டிருக்க ஒரு பெடியன் 'ஐயா தண்ணியைக் காசுகுடுத்து வாங்கிற ஆக்களிலை நாங்களுந்தானே உள்ளடக்கம்' எண்டு நிப்பாட்டினான். 'அட தம்பி நீர் உந்த சுத்திகரிச்சதண்ணி போத்தில்த் தண்ணியதுகளையோ சொல்லுறீர்?' எண்டு கேட்டார் முருகேசர். 'ஓஓமோம்...'எண்டான்உற்சாகமாய்ப் பெடியன்.

'தம்பி இயற்கையாய்க் கிடைச்ச எல்லாத்தையும் நாங்கள் காசாக்கிற வழியைத்தான் பாக்கிறமே தவிர பாதுகாக்கிற வழியளைக் கைவிட்டிட்டம்' எண்டு மாஸ்ரர் கவலையோடை சொன்னார். உண்மைதான் மாஸ்ரர்... மண்ணுக்குக் காசு... சாப்பாட்டுச் சாமானுகளுக்குக் காசு...எரிக்கிற விசயத்துக்கும் காசு...' எண்டு கனகர் சொல்லிக்கொண்டிருக்க இடைமறிச்சு முருகேசர் 'ஏனப்பா கனகு பஞ்ச பூதங்களுக்கும் இப்ப விலை குறிபடுகுது...' எண்டார்.

'காத்தொண்டுதான் காசில்லாதது...அதிலையும் எப்ப கை வைக்கிறாங்களோ தெரியாது?' எண்டார் கனகர். 'ஏனங்கிள் காத்தையும் காசு குடுத்து வாங்கிறமல்லே?' எண்டு சிரிச்சான் மற்றப் பெடியன். 'என்ன தம்பி சொல்லுறீர்? குத்தையும் காசுக்கு வாங்கிறமோ?' எண்டு கேட்டார் கனகர். 'ஓம் கனகு மாமா... காத்துக்கெண்டு பானைச் சுத்தவிடுகிறமல்லே? அதைத்தான் இவன் சொல்லுறான்' எண்டான் சுதன்.


'காசாக்கிற விசயத்திலை நாங்கள் ஒண்டையும் மிச்சம் விடயில்லை எண்டிறியள்? அப்பிடித்தானே?' எண்டார் கனகர் குழப்பமாய். 'இஞ்சாரும் கனகு... நாங்கள் எங்களையறியாமலேயே காசைக் குடு;த்தல்லே காத்தையும் வாங்கிறம்?' எண்டார் ஒரு சிரிப்போடை மாஸ்ரர். 'அது கனகாலமாய் நடக்குது... நாங்கள்தான் இதுதான் அதுதான் எண்டு பிரிச்சு அறியாமலுக்கிருந்திட்டம்... இப்ப விலையள் கூடயுக்கைதான் ஐயோ ஆத்தே எண்டு குழறுகிறம்...அதுகும் இன்னும் கனபேருக்கு விளக்கமில்லை' எண்டார் முருகேசர்.

'உண்மைதான் முருகேசர்...எங்களையறியாமலுக்கு

நாங்கள் அரசாங்கத்துக்கு அள்ளிய ல்லேகுடுத்துக்கொண்டிருக்கிறம்?' எண்டார் மாஸ்ரர். 'உந்த விலையேத்த மெண்டிறது இப்ப தண்ணியிலை வந்து நிக்குதெண்டல்லே நினைச் சம்...காத்தின்ரை விலையும் கறன் ரின்ரை விலையோடை கூடினதைக் கண்டுகொள்ளேல்லை...பாத்தியளே?' எண்டார் கனகர். 'இப்ப இருந்து பாருங் கோவன் சாகிறதுக்கும் வரி கட்ட வேண்டி வரப்போகுது' எண்டு கொண்டு எழும்பி வந்திட்டன். சிரிப் புச் சத்தமாய்க் கேட்டுது.

# மீட்டல்...

## 22



துன்பானந்த சுவாமி

இன்று எமது பண்பாட்டில் உபசரித்தல் என்பது அனேகமாக இல்லையெனுமளவில் வந்து நிற்கிறது. சாப்பிடவாருங்கள் என்ற ழைக்க முன்பே வரிசையில் இடிபடுகிற நிலை யாகிவிட்டது. மறுபுறம் வாருங்கள் என்ற ழைக்க ஆளில்லாதநிலையும் உள்ளது. அழைப்பாளர்கள் ஒளிப்படப்படிப்பில் படப்பிடிப்பாளரின் எடுபிடிகளாக நடிப்பில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதை இன்று இயல் பாகக் காணமுடியும். உணவுக்காக வரவேற் பது எப்படி? உபசரிப்பது எப்படி?

விருந்திற்கான அழைப்பு மட்டுமல்ல நிகழ்வு வாயிலிலும் வரவேற்பென்பது அனே கமாக குறைந்துவிட்டது. இல்லையென்று சொல்லுமளவிற்கு வந்துவிட்டிருக்கிறது. மண்டபங்களுக்குள் முடங்கிவிட்டன இன் றைய கொண்டாங்கள். ஒரு குறித்த மண் டபத்தில் ஒரே நேரத்தில் இரண்டோ அதற் கும் அதிகமானதோ நிகழ்வுகள் நடைபெறு கின்றன. மண்டபக்காரர் வாயிலில் எழுதி வைத்கிறார்கள். அதனைப் பின்பற்றினா லேயே உரிய நிகழ்விற்குச் செல்ல முடியும். வயோதிபர்கள் பலர் தடுமாறுவதைக் காண முடிகிறது.

வயோதிபர்கள் கால் பிரச்சனையுள்வர்கள் தளம்மாறி ஏறியிறங்கிப் படுகிறதுன்பம் சொற் பமானதல்ல. குறித்த நிகழ்விற்கு ஏன்தான் வந்தோமோ என்கிற வார்த்தைகள் அங்கே குழறிக்கொண்டிருக்கும் ஒலிபெருக்கற் பெட்டிகளுக்கும் மேலாகக் காதில் விழுந் ததும் உண்டு. அழைப்பிதழ் கொடுத்தாயிற்று வருவோர் வருவார்கள் வரட்டும் என்கிற அலட்சியப்போக்கு உள்ளது. விழா ஏற்பாடு செய்தவர்கள் வாயிலில் நின்று வழிப்படுத்தி வரவேற்பது வீணானது என்றுதான் எண்ணு கிறார்களோவும் தெரியாது?

சரியாக இனங்கண்டு உள்ளே நுழைந்தால் மண்டபங்களது அமைப்பு இருக்கையை அடைவதற்கிடையில் விழுந்துவிடுவோமோ என்கிற அச்சத்தைத் தன்னியல்பாகத் தோற்று வித்து விடுகின்றன. படிக்கட்டு அமைப்பாக அமைக்கப்பட்ட பல மண்டபங்களில் படி களை இனங்காணக்கூடியதாக அமைப்புக ளும் இல்லையென்பது கவனிக்கத்தக்கது.

## இந்த வாரச் சொல்

# புக்கை

புக்கை என்கிற சொல் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் பெயர்ச் சொல்லாகவே அதிகம் பயன்படுத்தப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் வினைச்சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது. பொங்கல், பாற்சோறு என இது முதன்மை அர்த்தத்தைக் கொண்டிருந்தாலும், உருக்குலைந்த நிலை, சிதைந்த நிலை, துப்பரவு அல்லது தூய்மையற்ற நிலை, ஒழுக்கக் குறைவு என்கிற அர்த்தங்களிலும் பயன்பாட்டிலுள்ளது. இதைவிட மருத்துவ முறை ஒன்றின் வழக்காற்றுப் பெயராகவும் இருக்கிறது.

"அந்தக் கோவில் புக்கை மிகவும் ருசியாக இருக்கும்"

(பாற்சோறு, பொங்கல் ஆகிய அர்த்தங்களில் வருகிறது)

"சோத்துக்குத் தண்ணியை அதிகம் விட்டதால புக்கையாகிப் போச்சு" (சோறு பதமில்லாமல் குழைந்து போய்விட்டது என்ற வினையாக வருகிறது)

"அவனுக்கு முகத்தில் அடித்து முகத்தைப் புக்கையாக்கிப் போட்டாங்கள்" (இதில் கடுமையான அடியால் முகம் சிதைந்து போன நிலை குறிப்பிடப்படுகிறது)

"அந்த வாகனம் விபத்துக்குள்ளாகிப் புக்கையாகிப் போச்சுது"

"அவன் ஆள் ஒரு புக்கையன்... ஒன்டையும் ஒழுங்காகச் செய்ய மாட்டான்"

"அதுகள் ஒரு புக்கைச் சனம்... அதுகளோட சமாளிக்க ஏலாது"

(இவற்றில் துப்புரவின்மை, ஒழுக்கமின்மை ஆகிய அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகிறது)

"முழங்கால் நோவுக்கு மாரிமுத்துப் பரியாரியிட்டைபோய் ரெண்டு புக்கை கட்டினால் சுகமாகும்"

"முருகன் முறிவு நோவு ஐயாவிட்ட புக்கை கட்டினால் பார்த்துக்கொண்டிருக்க நோவு சுகமாகும்"

(இவற்றில் புக்கை கட்டும் மருத்துவ முறை என்கிற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறது)

மண்டபங்களது அமைப்புப் பற்றியதாக பேச வேண்டிய பல விடயங்கள் உள்ளன. பிறிதொரு நாள் பேசலாம்.

வரவேற்பென்பது இல்லாமலேயே மண்டபத்துள் சென்றமர்ந்தால் அங்கிருக்கிற ஒலிபெருக்கற் பெட்டிகளின் இரைச்சல் பொருத்தமற்ற செயற்கைக்குளிர் எல்லாமாகச் சேர்ந்து தலையிடியை வரவழைத்துவிடுகிறது. பேச்சுத்துணையென்று யாராவது இருப்பினும் பேசக்கூடியதாக மண்டபத்துள் நிலைமை இருக்காது. நிலைமையை உணர்ந்திருப்பீர்கள். விழா ஏற்பாடு செய்தவர்களை அவ்வப்போது காணமுடியும். அதுதான் அனேகமாக வந்திருக்கிற இடம் சரிதான் என்கிற நம்பிக்கையைத் தருகிறது.

அவர்கள் அந்தணரதும் ஒளிப்படக்காரரதும் எடுபிடிகளாக அலைந்துகொண்டும் வியர்வை கலைத்த ஒப்பனையைச் சீர்செய்வதிலுமாக தமது பொழுதைக் கழித்துக்கொண்டிருப்பார்கள். உறவினர்கள் என்று வந்தவர்களும் விருந்தினர்களுடன் விருந்தினர்களாக இருந்துவிடுகிறார்கள். காரணம் ஒப்பந்த முறையிலான ஏற்பாடுகள்தான். எதைக் கேட்டாலும் இப்படிச் செய்வாற்காகத்தான் பதிவு செய்தார்கள் என்கிற பதிலொன்றே மண்டபக்காரரால் வழங்கப்படுகிறது.

கதிரை மேசை விருந்து என்று கூறும்போது கதிரை மேசைகளதுதரம் பற்றிக் குறிப்பிடுவது தவிர்க்கவியாத ஒன்று. நெகிழியாலான அவற்றினது தாங்கு திறன் காரணமாக விழுந்து அவதிக்குள்ளாகியவர்கள் ஏராளம். கதிரைகள் கால்கள் வளைந்தோ உடைந்தோ போகக்கூடிய தரத்திலேயே அதிகமான மண்டபங்களில் இருக்கின்றன. காரணம் மலிவு. மேசைகளும் அனேகமான இடங்களில் தரங்குறைந்தவையே உள்ளன. ஒருவர் உண்டுகொண்டிருக்கையில் இன்னொருவர் இருக்க முயலும்போது மேசை நிலை தடுமாறி ஆடுகிறது. உணவு சிந்துகிறது. நீர்ப் போத்தல்கள் விழுகின்றன. கையை ஊன்றி எழும்ப முயன்றதால் கவிழ்ந்த சம்பவங்களும் உண்டு.


அதனை விட வேடிக்கையான துன்பம் உண்டு. பயணம்செய்து மண்டபம் செல்கிறோம். வணக்கம் சொல்வதை தரக்குறைவாகக் கருதி கை குலுக்குகிறோம். கதிரை, திரைச்சீலைகள் என பல இடங்களையும் தொடுகிறோம். சாப்பாடு தொடங்குகிறது என்று இடிபட்டு ஓடி அந்தக் கையாலேயே உண வருந்துகிறோம். கை கழுவுவது பற்றி யோசிப்பதில்லை. மறுபுறமாக அதற்குரிய இடம் மண்டபத்தின் பின் பகுதியிலேயே அனேகமாக இருக்கிறது. சாப்பாட்டின் பின்தான் கைகழுவுதற்கான ஏது நிலையே உள்ளது.

கை கழுவுமிடம் மண்டபங்களில் பின்புறமாக இருப்பது மட்டுமல்ல குழாய்கள் மிக நெருக்கமாக ஒரேயிடத்திலேயே பொருத்தி வைக்கப்பட்டும் உள்ளன. சாப்பிட்ட பின்னர் அவ்விடத்தில் ஒரு சனநெரிசல் கட்டாயமானது. விருந்தென்று அழைக்கப்பட்டவர்கள் உபசரிப்பைப் பெறுவதைவிட அதிகமான துன்பத்தை அனுபவிப்பதுதவிர்க்க முடியாததாகவே கை கழுவுமிடம் இருக்கிறது. பல கோடிகளை விழுங்கி நிமிர்ந்து நிற்கிற மண்டபங்களில்கூட இந்நிலைதான் உள்ளது. பேசுவதற்கு இன்னும் உள்ளன. பேசுவோம்.






# டி.டி



**கதை**

புதுச்சேரியில் மிகப் பெரிய தாதாவாக வலம் வருகிறார் அன்பரசு (ஃபெப்சி விஜயன்). அவர் தனது மகன் பென்னி (ரெடின் கிங்ஸ்லீ)க்கு திருமணம் செய்து வைக்க முடிவெடுக்கிறார். அதன்படி பணம் கொடுத்து விருப்பமில்லாத பெண் ஒருவரை இணைத்துவைக்க முயற்சிக்கக் கடைசி நேரத்தில் அந்தப் பெண் ஓடிவிடுகிறாள். இதனால் அவளது தங்கை சோபியாவை (சுரபி) மணம் முடிக்க ஆயத்தமாகின்றனர். இதையறிந்த சோபியாபவின் காதலர் சதீஷ் (சந்தானம்), அன்பரசு கொடுத்த பணத்தை திருப்பி கொடுத்துக் கல்யாணத்தை நிறுத்திச் சோபியாவை மீட்க நினைக்கிறார். இதற்காக அவர் பணம் திரட்டுகிறார். அந்தப் பணம் பேய் பங்களா ஒன்றில் மாட்டிக்கொள்கிறது. அந்தப் பணத்தை அவர் மீட்டாரா? இல்லையா? அந்தப் பங்களாவில் நடந்தது என்ன என்பது தான் மீதிக்கதை.

**இயக்குநரின் முயற்சி**

'குளு குளு', 'ஏஜென்ட் கண்ணாயிரம்' ஆகிய படங்களுக்குப் பிறகு மீண்டும் காமெடிக்கு திரும்பியிருக்கிறார் சந்தானம். அவரின் வழக்கமான நகைச்சுவைகளைத் தவிர்த்துவிட்டுக் காட்சிகளுக்கு ஏற்றால் போல் நகைச்சுவை வழங்கிப் படத்தை இயக்கியிருக்கிறார் இயக்குநர் ப்ரேம் ஆனந்த். எதிர்பாராத தருணங்களில் ஆச்சரியப்படுத்தும் காட்சிகளுக்கு வலுசேர்க்கும் அவரது எழுத்து கதையோட்டத்துக்கு பெரும் பலம். நிறைய கதாபாத்திரங்களை கதைக்குள் கொண்டு வந்த போதிலும் அவற்றை வீண்டிக்காமலும், திணிக்காமலும் கொண்டு சென்றது நேர்த்தி. சின்னச் சின்னக் கொள்ளைக் கும்பல் அவர்களுக்கிடையே நடக்கும் சம்பவங்கள், கைமாறிக்கொண்டேயிருக்கும் பணம், சூது அதற்கு தகுந்தாற்போல நுழைக்கப்பட்ட நகைச்சுவைகள் என இடைவேளைக்கு முன்பு வரை கதைக்கருவுக்குள் நுழையாத திரைக்கதை பார்வையாளர்களுக்குச் சலிப்பை ஏற்படுத்தாலம் நகர்கிறது.

படம் மையக்கதைக்குள் நுழையும்போது ஒரு விளையாட்டு, அதற்கான வெ;வேறு லெவல்கள் என்று நமக்குப் பழக்கப்பட்டிருந்தாலும், அதையொட்டி எழுதப்பட்டுள்ள சில சுவாரஸ்யமான காட்சிகள் அத்துடன் கைகொடுக்கும் நகைச்சுவைகள் ரசிக்க வைக்கின்றன. அறிமுகப் பாடல் தவிர தேவையற்ற பாடல்களையோ, காதல் காட்சிகளையோ இடையில் சேர்த்துத் துன்புறுத்தாமல் இருந்தது பெரும் ஆறுதல்.




**கதாபாத்திரங்கள்**

ஒரு சில பரிட்சார்த்த முயற்சிகளுக்குப் பின் மீண்டு தனது களத்துக்குத் திரும்பியிருக்கிறார் சந்தானம். பேயிடம் நக்கலாக நடத்தும் பேச்சு வார்த்தை, அசால்ட்டான உடல் மொழி என மிகையில்லாத நடிப்பால் கவர்கிறார். ஆனால் சண்டைக் காட்சிகளில் தடுமாற்றம் இருப்பதை உணரமுடிகிறது. அவரை தவிர்த்து, மாறன், மொட்டை ராஜேந்திரன், முனிஷ்காந்த், ரெடின் கிங்ஸ்லி, பழைய ஜோக் தங்கதுரை, குறிப்பாக ஃபெஃப்சி விஜயன், பிபின், தீபா ஆகியோர் நகைச்சுவையில் கவனம் பெறுவதுடன் கதாபாத்திரங்களுடன் பொருந்திபோகிறார்கள். முரட்டு வில்லனாக வரும் சாய் தீனா கூட இறுதியில் சில காட்சிகளில் கவனம் பெறுகிறார். பேயாக பிரதீப் ராம் சிங் ராவத் சில காட்சிகளே வந்தாலும் தேவையான நடிப்பை வழங்கியிருக்கிறார். நடிகை சுரபிக்கு பெரிய அளவில் வேலையில்லை என்றாலும் நடிப்பிலும் குறையில்லை.

எளிதில் யூகிக்க முடிந்த கதையில் சில நகைச்சுவைக்காட்சிகளையும் சேர்த்தே கணிக்க முடிவது பலவீனம். பாண்டிச்சேரியில் நடக்கும் கதையில் சந்தானத்தின் சென்னை உச்சரிப்பு திணிப்பு. முழுமையான படம் பார்த்த உணர்வுக்குப் பதிலாக பல்வேறு நகைச்சுவைகளை கோர்த்து பார்த்த அனுபவம் இறுதியில் மிஞ்சுகிறது. வழக்கமான ஹாரர் பின்னணி இசை தான் என்றாலும் சில இடங்களில் கவனிக்க வைக்கிறார் இசையமைப்பாளர் ஆஃப்ரோ. பேய் பங்களாவுக்குள் நடக்கும் காட்சிகளை ரசிக்கும்படியாக பதிவு செய்திருக்கிறது தீபக் குமாரின் லென்ஸ். தேவையில்லாமல் எதையும் சேர்க்காமல், 3-4 குழுக்களை பிரித்து காட்சிய விதம், விறுவிறுப்பை சேர்த்தது, கேம் ஷோவை கச்சிதமாக காட்சிப்படுத்தி படத்தை அயற்சியில்லாமல் 2மணி நேரத்துக்குள் முடித்து கொடுத்துள்ளார் படத்தொகுப்பாளர் என்.பி.ஸ்ரீகாந்த். கலையாக்கத்தில் ஏ.ஆர்.மோகனின் உழைப்பு பளிச்சிடுகிறது.

கதையையோ, பேய் பற்றிய பயத்தையோ எதிர்பார்க்காமல் வாலிப நகைச்சுறை, உருவக்கேலி வசனங்களில்லாமல் பார்த்துச் சிரிப்பதற்குப் படத்தின் பெரும்பாலான காட்சிகள் கைகொடுக்கின்றன.

# கொழும்புத் தமிழ் அரசியல்வாதிகளின் பகுதி நேரத் தில்லுமுல்லு...!

விந்தியா



தமிழர் பிரச்சினைக்கு வடக்குக் கிழக்குக்குள் ஓர் அரசியல்தீர்வு வந்து விடக்கூடாது என்பதில் கொழும்பு மையத் தமிழ் அரசியல்வாதிகள் அதிக கவனம் செலுத்திவருவது பலரும் அறியாத சங்கதி. அவ்வாறு தீர்வு ஒன்று வந்து விட்டால் இந்த அரசியல்வாதிகள் வடக்குக் கிழக்குக்குள் முடக்கப் பட்டுவிடுவர் என்ற பயமும் இவர்களுக்கு இருக்கிறது. இவர்கள் ஒரு போதும் கொழும்பை விட்டு வெளியேறி வடக்குக் கிழக்கில் வாழ விரும்ப மாட்டாதவர்களாக இருக்கிறார்கள். அரசியலைப் பகுதி நேரமாகச் செய்யும் இவர்களின் தொழில், சொத்துக்கள் எல்லாமே கொழும்பில் இருப்பதால் சிங்களத் தலைவர்களுடன் சமரசம் செய்து கொள்ளவே விரும்பும் நிலை காணப்படுகிறது.

ஒற்றையாட்சியின் கீழ் தமிழருக்குத் தீர்வு தேவையில்லை என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறிவருகிறார். தவிர அதற்கான மாற்றுத் திட்டம் என்னவென்று ஒரு போதும் அவர் கூறவில்லை. அவரது அந்தக் கருத்தைச் சிங்களவர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என்பது அவருக்கு நன்கு தெரியும் என்பதால் அவர் கொழும்பை விட்டு வெளியேற வேண்டிய அவசியம் ஏற்படாது தன்னைத் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

நல்லாட்சி அரசைத் தாமே கொண்டு வந்ததாகத் தம்பட்டம் அடித்ததுடன் தனது மகனுக்குச் சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்து வைத்துத் தனது முழுநேர ஊழியமான சட்டத்தரணித் தொழிலைக் கொழும்பிலிருந்து பாதுகாத்துக் கொண்டவர் எம்.ஏ.சுமந்திரன். வடக்குக் கிழக்கு மக்களுக்குக் காதிலே பூவை வைக்கப் புல் வயலுக்குள் மாட்டுழவு செய்து (சாவரி மாட்டால்) நெல் விதைத்தும் சேற்றுக்குள்ளிருந்து பனை ஓலைத் தட்டில் சாப்பிட்டும் காட்டினார். இவர் சிறு வயதிலிருந்து சிங்கள மக்களுடன்கூடி வாழ்பவர்.

கொழும்பில் பிறந்து சிங்களவருடன் வாழ்ந்தவர் சி.வி.விக்னேஸ்ரன். அவரது சொத்துக்களும் அதற்கான கௌரவமும் சிங்கள மக்கள் மத்தியில் இருப்பதால் தனது இரு புதல்வர்களையும் முக்கிய சிங்களக் குடும்பங்களில் திருமணம் செய்து வைத்தவர். 2013இல் வடக்கு மாகாண சபை முதல்வராகத் தெரிவான பின் அரசதலைவர் மகிந்த ராஜபக்ச முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்வேன் என்று அடம் பிடித்துத் தனது சிங்களச் சம்பந்திகளுடன் சென்று சத்தியப் பிரமாணம் செய்துகொண்டார். தற்போது அரச தலைவர் ரணில்விக்கிரம சிங்கவின் மதியுரைஞர் என்று தன்னைத்தானே கூறியிருக்கிறார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 2010இல் தேசியப் பட்டியல் மூலம் எம்.ஏ. சுமந்திரனை நாடாளுமன்ற உறுப்பினராக்கியது. 2013இல் வடக்கு மாகாணசபைத் தேர்தலின் போது நீதியரசராக இருந்து ஓய்வு பெற்ற விக்னேஸ்வரனைக் களமிறக்கினார்கள். பின்னர் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தீர்மானங்களைக் கொழும்பு அரசியல்வாதிகளான இவர்களே தீர்மானித்தார்கள். 2020 தேர்தலில் விக்னேஸ்வரன் தனிக் கட்சி ஒன்றில் போட்டியிட்டு

வெற்றிபெற்றார். தமிழ் அரசுக்கட்சியின் தலைவர் யாழ்ப்பாணத்திலும் அதன் செயலர் கிழக்கு மாகாணத்திலும் தோல்வியடைந்தனர். இந்தக் கொழும்பு மையத் தலைவர்களில் இருவர் சட்டத்தரணிகள், ஒருவர் உயர்நீதிமன்ற நீதிபதி. இவர்களுக்கு வடக்குக் கிழக்கு மக்கள் வாக்களித்து நாடாளு மன்றத்துக்கு அனுப்பினார்கள். ஆனால் இவர்கள் மூவரும் தமது கொழும்பு மைய அரசியல் விடயத்திலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர். இதனால் சிங்களத் தலைவர்களின் எண்ணத்துக்கு ஏற்றால்போல் வடக்குக் கிழக்குக்குள் தமிழருக்கான தீர்வு ஒன்று வருவதை இவர்கள் ஒருபோதும் விரும்பப் போவதில்லை. எதிர்காலத்தில் தமக்கு வடக்குக் கிழக்குக்குள் ஓர் அரசியல் தீர்வு கிடைக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் விரும்பினால் இவர்கள் போன்ற கொழும்பு மைய அரசியல்வாதிகளுக்கு வாக்களிப்பதைத் தவிர்க்க வேண்டும்.






# கசடற

அண்மையில் தென்னிந்தியாவில் வெளியபகிய குறும்படம் கசடற. இதை இயக்கியிருக்கிறார் விஜய் ஆம்ஸ்ட்ரோங். 'தோழியாகவும் உடன் நிற்கும் அம்மாவுக்குச் சமர்ப்பணம்' என்று தொடங்கும் படம், மகளின் மீதான கரிசனம் வழியே இன்று நம் பிள்ளைகளின் சிந்தனையை மலடாக்கும் கல்வி முறை மீது எழுப்பும் கேள்விகளாக உருமாறுகிறது.

**கதை**

பாடசாலைக்குச் செல்வதாகச் சொல்லி விட்டு, பாடசாலைக்கு வெளியே இயற்கை எனும் வகுப்பறையில் தன் மகளுக்கு கற்றுக் கொடுக்கும் ஒரு தாயையும் அவர்களால் கல்வியின் 'புனிதம்' கெட்டுவிட்டதாகக் கூச்சலிடும் ஒரு பாடசாலையையும் 'கற்றல்' எனும் புள்ளியில் இணைக்கிறது இந்தக் குறும்படத்தின் கதை.

தூக்கத்திலிருந்து எழ மறுக்கும் அந்த சின்னஞ்சிறு குழந்தை, பாடசாலைக்குச் செல்லும் வழியில் இயற்கையின் அழகுகளில் லயிக்க, அதற்கு உடன்படுகின்ற அந்தக் குழந்தையின் அம்மாவைப்போல்



எல்லா அம்மாக்களும் இருந்து விட்டால் எவ்வளவு நலமாக இருக்கும்...?

'இன்னும் சாப்பிடக்கூட ஒழுங்கா கத்துக்காத குழந்தைகள் கிட்ட எதுக்கு இவ்வளவு கண்டிப்பு? அவங்களுக்கு யூனிஃபார்மை மாட்டி, வலுக்கட்டாயமா நாலு சுவத்துக்குள்ள உட்கார வைச்சு, உங்க ஸ்கூல் லயே இருக்கிற சிஸ்டம்படி, அதுக்குள்ள இருக்க ஷெட்யூல்படி, அவங்களுக்கு எல்லாத்தையும் திணிக்கிறது தானே உங்க மெத்தட் ஆஃப் டீச்சிங்? எல்லாக் குழந்தைகளும் உங்க சட்டதிட்டத்துக்கு உட்படணும்..

ஒருவேளை அந்தக் குழந்தைகளுக்கு அது பிடிக்கலைன்னா இந்த சிலபஸ்சையும் பாடத்தையும் அந்தப் பிள்ளைகளோட மூளைக்குள்ள எப்படியாவது திணிச்சாகணும் இல்ல?' என்று அந்த இளம் தாய் கேட்கும் கேள்வி, 'பிட்டுக்கு மண் சுமந்தவன் மேல் பட்ட அடி' உலகின் சகல ஜீவராசிகளின் மேலும் விழுந்தது போல் நம்மேலும் விழுகிறது. அவள் கேள்விகளில் இருப்பது வெறும் தர்க்கம் மட்டும்தானா?

அவள் மேலும் கேட்கிறாள். 'ஒரு ஞாயிற்றுக்கிழமை கொடுக்கிற சந்தோஷத்தைக்கூட இந்தப் பள்ளிக்கூடம் கொடுக்க முடியலையே... ஏன் சோர்?' இதற்கெல்லாம் நம்மிடம் பதில் உண்டா? ஒரு நல்ல கலைப்படைப்பின் வேலை, மந்தை மன அமைப்பு கொண்ட மனிதர்களிடம் அவர்கள் உருவாக்கி வைத்துள்ள உதவாத 'சிஸ்டம்' மீது சாரமான கேள்விகளை உருவாக்குவது தானே!

'ஒரு புத்தகத்தைப் படித்துப் பரீட்சையில் தேர்ச்சி பெற்று, முடிப்பதல்ல கல்வி. நீங்கள் பிறந்தது முதல் இறக்கும் வரை, முழு வாழ்க்கையும், ஒரு கற்றல் செயல்முறையே' என்கிறார் ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி.



அதைத்தான் இந்தப் படம் இயற்கை யின் நடுவே நம்மை அமரவைத்து நமக்குச் சொல்லிக் கொடுக்கிறது.

உள்ளடக்கத்தில் மட்டுமல்ல, ஒளிப் பதிவில், இயக்கத் தில், கலைஞர் களை வேலை வாங்கியதில் என உள்ளடக்கத் தின் நோக்கத்தைத் துலங்கச் செய்வதில் தனது கலையாளுமையை திறம்பட வெளிப்படுத்தியுள்ளார் இயக்குநர். இசை, வசனம், காட்சி அமைப்பு - எல்லாமே உறுத்தலில் லாமல் ஒத்திசைவாய் கைகோர்த்து நம் பார்வைக்கு வந்திருப்பதற்குக் காட்சித் தொகுப்பாளர் பழனிவேலும் ஒரு காரணம்.

படத்தின் இறுதியில் குழந்தையின் தாய் வளர்மதி தன் கணவர் நகுலனிடம் இப்படி கேட்கிறார் 'ஏன்பா... நீ கோவிச்சுக்கலைன்னா நான் ஒன்னு சொல்லட்டுமா? நாமளே ஒரு ஸ்கூல் ஆரம்பிக்கலாமா?' இந்தக் கேள்வியுடன் பெரும் விவாதத்தைத் தொடங்கி வைக்கும் இந்தக் குறும்படம் பார்த்துக் கடந்து செல்லாமல் பரப்ப வேண்டிய படைப்பு.

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.08.2023 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781